<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

**OS.No**.729/2022 பெயர்- வித்யா நாகராஜன் நாள்.17.10.2024

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் போஸ்ட் ஆபிசில் சப்போஸ்ட் மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். எனது கணவர் எந்த தேதியில் இறந்தார் என்றால், 20.08.2019ல் இறந்தார். வழக்கு காசோலை 17.08.2019ல் திருப்பப்பட்டு விட்டது என்றால், சரிதான். வழக்கு காசோலை போதிய பணம் இல்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். எனது கணவர் எனது கையெழுத்திட்டு காசோலையை நிறைய நபர்களுக்கு கொடுத்துள்ளார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி விவரம் எனது கணவர் இறப்பதற்கு எத்தனை மாதங்களுக்கு முன்பாக எனக்கு தெரியும் என்றால், சுமார் 1 மாதத்திற்கு முன்பாகத்தான் தெரியும். அது குறித்து குறிப்பிட்டு எனது வங்கிக்கு ஸ்டாப் பேமெண்ட் கடிதம் எதுவும் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். எனது கணவர் எனக்கு தெரியாமல் என்னுடைய கையெழுத்திட்டு சுமார் 50 காசோலைகள் பல்வேறு நபர்களுக்கு கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் காசோலை எண்கள் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், குறிப்பிட்டு சொல்ல முடியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வெங்கடேஷ் என்பவர் வாதி செந்தில்குமார் மீது ரூ.29,50,000/-கடன் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி வழக்கிலிருந்து வாதி செந்தில்குமார் விடுதலை செய்யப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். இந்த வழக்கின் வாதியால் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பப்பட்டதற்கு பின்னிட்டாவது எனது கணவர், என் கையெழுத்திட்டு கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள காசோலைகள் குறித்து ஸ்டாப் பேமெண்ட் கடிதம் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடைய அல்ல என்று நிரூபிப்பதற்கு கையெழுத்து நிபுணருக்கு நான் கடிதம் எதுவும் எழுதவில்லை என்றால், சரிதான். அதேபோல் வீட்டு லோனிற்காக வைத்திருந்த காசோலைகளை என் கணவர் எடுத்து போய்விட்டதாக கூறியுள்ள நிலையில் அது எந்த தேதியில் அல்லது எந்த காலகட்டத்தில் எடுத்துப் போனார் என்று சொல்லவில்லை என்றால், எனக்கு தேதி தெரியாது. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வரவுசெலவு காலத்திலும், நாளது காலகட்டத்திலும் மிகுந்த பணத்தேவையில் இருந்து வருகிறேன் என்றால், சரியல்ல. என் மீது ஈரோடு நீதிமன்றங்களில் சுமாராக எத்தனை காசோலை வழக்குகள் குற்றவியல் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளது என்றால், 2 வழக்குகள் நிலுவையில் உள்ளது, 3 வழக்குகள் முடிந்துள்ளன. கடன் வாங்கிய தொகையை திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் இறந்துபோன என் கணவர் மீது பழியைப்போட்டு பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால், சரியல்ல.